பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 ★ சிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 7உ (24—10—67) செவ்வாய் வெளியூர் : ஐப்பசி 8உ (25—10—67) புதன் [இதழ் : 109

சர்க்கரை கசக்கிறது---
சட்டப் பிரச்சினை தோன்றுகிறது!

புதுடில்லி அக்டோபர் 23-ந்தேதியிட்ட 'எக்ஸ்பிரஸ் நியூஸ் சர்வீஸ்' நிறுவனச் செய்தியொன்றின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது :—

"திரு அண்ணாதுரையின் பழுப்பு சர்க்கரை பற்றிய ஏற்றுமதிக் கட்டுப்பாட்டினால், எதிர்பாராத அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கும் மத்திய அரசு, 'ஒருதலைபட்சமாக'க் கருதப்படும் இந்த முடிவினை, 'மாநில அரசு கைவிடும்' என எதிர்பார்க்கிறது!

மாநிலத்துக்குள் விலை ஏறி வ[illegible]தைத் தடுக்கவே தமிழக அரசு இந்த முடிவினை எடுத்தி[illegible]றது; ஆனால், மத்திய நிர்வாகத்தின் கூறுகளாக இருக்கும்[illegible]ப்பு—வெள்ளை சர்க்கரை பற்றிய ஒரு முடிவினையும், மாநி[illegible]ரசு, சட்டப்படி புதுடில்லியுடன் கலந்தாலோசிக்காமல் எடு[illegible]!

(மாநில அரசின்) இந்த முடிவு, மத்திய [illegible] சங்கடமான நிலைமையில் விட்டிருக்கிறது!

"சென்னைக்கு பருப்பு—தானிய வகைகள் ஏற்றுமதியாவதை ஒருதலைபட்சமாகத் தடுத்து நிறுத்தியிருக்கும் மற்ற மாநில அரசுகளை மத்திய அரசு தட்டிக் கேட்கவேண்டும் என்பதற்காகவே தமிழக அரசு இந்த முடிவினை எடுத்திருப்பதாக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறியுள்ளார்.

"பஞ்சாப், அரியானா, இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், உளுந்து, ஓர் உணவுத் தானியமாகக் கருதப்படுகிறது; எனவே தான், அதன் ஏற்றுமதிக்குத் தடை இருக்கிறது"

என மத்திய அரசு விளக்குகிறது. அந்த மாநிலங்களில் மழை காரணமாகவும் உற்பத்தி குறைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தமிழக அரசு அப்படிச் சொல்லவில்லையென்றாலும், அதன் முடிவு நிறைவேற்றப்படுமானால், அது, மத்திய அரசை எதிர்த்த போக்காகத்தான் இருக்கும்! 'மோதுதல்' என்ற அளவுக்கு நிலைமை வளருமா என்பது இனிமேல்தான் தெரிய இருக்கிறது!

தன்னுடைய தேவைக்கு மேற்பட்ட சர்க்கரையைத் தமிழகம் உற்பத்தி செய்த போதிலும், மாநிலத்தின் தேவையை நிறைவு செய்ய மத்திய அரசு ஒதுக்கித் தருவது பற்றாக் குறைக்கே வித்திடுவதென்பது, தமிழக அரசுக்குச் சங்கடத்தைக் கொடுக்கிறது! திரு. அண்ணாதுரையும், 'இது, முறையற்ற செயல்' என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

காதால் கேட்டது!

ஒருவர் :—

"எதற்கெடுத்தாலும் 'மத்திய ஆட்சி, மத்திய ஆட்சி' என்கிறார்கள்—கிளிப்பிள்ளை மாதிரி; கிளிப்பிள்ளைக்கு அறிவு இருக்கிறதா?"—இப்படிக்கேட்டு, கழக அமைச்சர்களை மடக்கியிருக்கிறார் காமராசர்!

மற்றொருவர் :—

'உனக்கு அறிவு இல்லை' என்று காமராசர், கிளிப்பிள்ளையின் முன்னால் போய் சொல்லிப்பார்க்கட்டும்; அப்போது தெரியும்—'கிளிப் பிள்ளைக்கும் இருக்கிறது, சொல்லியதைத் திருப்பிச் சொல்லும் அறிவு என்பது!

காமராசரே! அஞ்சேல்!

"'பழங்கதைகளை ஏன் கிளறிவிட வேண்டும்--மக்கள் அதை மறந்து அமைதியாக இருக்கிறார்கள்' என்று நான் நினைத்திருந்தேன்; காங்கிரசுக்காரர்கள் பேசுவதால் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது!

"'கழகத் தோழர்கள் பொறுமையாக இருக்க வேண்டும்; காங்கிரசுக்காரர்கள் நம்மை நீண்டகாலமாகச் சோதிக்கிறார்கள்; இருந்தாலும், அமைதியாக இருப்போம்' என்று நான் பேசியதை காமராசர் தவறாக எடுத்துக்கொண்டு பேசியிருக்கிறார்.

"அண்ணாதுரை, 'பொறுமை இழந்துவிடுவேன்' என்கிறார்; 'பொறுமை இழந்தால் என்ன செய்வாய்? துப்பாக்கியால் சுடுவாயா?' என்றும் கேட்கிறார்!

"அவருக்கு நான் தெரிவித்துக்கொள்வேன்—'நான் சுடமாட்டேன்'! காமராசர் எப்படிப் பேசினாலும் அவரிடம் எனக்கிருக்கும் மதிப்புக் குறையாது!

"ஆனால், 20 ஆண்டுக் காலமாக நம்மை எப்படியெப்படி எல்லாமோ மிரட்டியவர்கள்—இப்போது மேடை போட்டுக்கொண்டு—'அண்ணாதுரை சுடவர்றான்—சுடவர்றான்' என்கிறார்களே—'இப்படியும் ஒரு காலம் வரும்' என்று நாம் நினைத்தோமா? இப்படி ஒரு காலத்தை உருவாக்கியவர்களே! நீங்கள் நல்ல தீர்ப்புத் தந்தீர்கள்! உங்களைப் பாராட்டுகிறேன்!"

"மீண்டும் காமராசருக்குச் சொல்லிக்கொள்வேன்—'நான் பேசாததை வைத்துக் கொண்டு பேசியிருக்கிறீர்கள்! உங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள்!"

---அறிஞர் அண்ணா

(நுங்கம்பாக்கம் கூட்டத்தில்)

'காமராசர்தான்' காரணம்

குண்டூர், அக். 22—

"காமராசரின் திறமையற்ற தலைமையே காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

"சுதந்தரப் போராட்டத்தில் பங்குகொண்ட பல பெரிய தலைவர்களெல்லாம் அண்மையில் காங்கிரசிலிருந்து விலகிவிட்டார்கள்; இதனால் காங்கிரசுக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது"

என்று, ஆந்திர மாணவர் காங்கிரசுக் கூட்டமொன்றில் பேசிய ஆந்திர மாநிலக் காங்கிரசுத் தலைவர் காசனி வெங்கடரத்தினம் கூறினார்.

கேட்ட குரல்--மறைந்த நினைவு!

"மகிழ்ச்சி வரும்போது மனிதன், நண்பர்களை மறந்து விடுகிறான்! துன்பத்தில் உழலும் நாங்கள், உங்களை மறக்கவில்லை!

"மகா[illegible]தால் நாங்க[illegible]கு அவர் ஒ[illegible]ப்பார்! எங்கள் [illegible] அவர் மறை[illegible]ப்பவர்கள் எங்களை மறந்தனர்!

"இந்தியா[illegible]ள எனது பழைய சகாக்களுக்கு நாங்கள் இப்[illegible]வேறு மனிதர்களாகிவிட்டோம்! எனவே, எங்[illegible]இன்னல்—எங்கள் துன்பம், அவர்களுக்கு இப்[illegible] புரியாது!

"அவர்களின் [illegible]னச்சாட்சி என்னவோ, எப்படியோ—எனக்குத் தெரி[illegible]து; ஆனால், அவர்கள் இருக்கும் இடத்தில் நான் இருந்தால், இப்படி நடக்கமாட்டேன்; மனிதத் தன்மை[illegible]காகவும், நியாயத்திற்காகவும், நேர்மைக்காகவும், [illegible]க்தூனிஸ்தான் கேட்பவர்களுக்காகப் போராடியிருப்பேன்!"

—பக்தூனிஸ்தான் கோருபவரும், 'எல்லைக் காந்தி' எனப்படுபவருமான கான் அப்துல் கபார்கான் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள்.

இந்திக்குப் பணியோம்!

தமிழக அரசின் உறுதி

"ஆட்சிபீடத்தில் தி. மு. க. இருக்கும் வரை, தமிழகம் இந்திக்குப் பணிவது என்பது நடவாத காரியம்"

என்று சட்டத் துறையமைச்சர் திரு. செ. மாதவன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும் என்பதுதான் நமது நிலை; வேறு மாறுதல் அல்லது நிபந்தனை எதுவும் நமக்குத் தேவை இல்லை" என்று அவர் தெரிவித்தார்.

"ஒரு மாநிலம் மட்டுமே கோரினால்கூட ஆங்கிலம் நீடிக்கத்தான் வேண்டும்" என்று நேரு கூறியதை அமைச்சர் நினைவூட்டினார்.

திருவாளர் சந்தேகம்

சுமார் ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு என்று நினைக்கிறேன்—அப்போது இங்கு அமைச்சராக இருந்த சுப்பிரமணியத்துக்கு, அண்ணா அவர்கள், அந்தக் கதையை சென்னைக் கூட்டமொன்றில் கூறினார்—

எதையும் 'துருவி' ஆராய்ந்து மூலத்தைக் கண்டுபிடிக்கும் பழக்கத்தைக் கொண்ட ஒருவன்—ஓட்டலில் போய் உட்கார்ந்து கொண்டு—எதிரே சாப்பிட்டுக் கொண்டிருந்தவனைப் பார்த்து, 'இந்தச் சோறு எதிலிருந்து வருகிறது தெரியுமா?' என்று கேட்டான்.

உரையாடல், இப்படி வளர்ந்தது :—

'அரிசியிலிருந்து!'

'அரிசி எதிலிருந்து வருகிறது?'

'நெல்லிலிருந்து!'

'நெல் எதிலிருந்து?'

'வயலிலிருந்து!'

'வயல் எப்படி விளைகிறது?'

'எரு இடுவதன் மூலம்!'

'எரு எப்படி உண்டாகிறது?'

சாப்பிடுபவன். முகம் சுளித்தான் — கேட்டவன் விடுவதாயில்லை!

'சாணம் போன்றவைகளிலிருந்து......'— கஷ்டப்பட்டுச் சொல்லிவைத்தான்!

இதுவரை கேட்டுக் கொண்டிருந்தவன்; இப்போது ஏதோ கண்டுபிடித்துவிட்டதைப்போன்று

'ஆக நீங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சோறு......?' சொல்லி முடிப்பதற்குள் சாப்பிட்டவன், கையைக் கழுவிக் கொண்டு வெகு தூரம் போய்விட்டான்!

இடையில் ஒரு ஐந்து ஆண்டுக் காலம் அமைச்சராக இருக்க நேர்ந்த பூவராகன், 'மூல'த்தை ஆராயும் 'திறமை' பெற்றிருக்கிறார்!

கல்லூரிப் பட்டம் ஒன்றுக்குச் சொந்தமான அந்த மனிதர், வேலூர் பொதுக் கூட்டமொன்றில் சொன்னாராம்—

"காந்திஜியால் தனக்கு எந்தவித இலாபமும் இல்லையென்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்; காந்தி இல்லாதிருந்தால், இவர் முதல் மந்திரியாக ஆகியிருக்க முடியுமா? காந்தி இல்லையென்றால் நமக்குச் சுதந்தரம் இல்லை; சுதந்தரம் இல்லையென்றால், ஓட்டு இல்லை; ஓட்டு இல்லையென்றால் இவருக்கு முதல் மந்திரி பதவி இல்லை" என்று.

எப்படி ஆராய்ந்திருக்கிறார் பார்த்தீர்களா?

அந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலேயே நாமும் இப்படிக் கேட்கலாமா?

"இங்கிலாந்து இல்லையேல் ஆங்கிலேயர்கள் இல்லை; ஆங்கிலேயர்கள் இல்லையேல் கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரிகள் இல்லை; இந்த வியாபாரிகள் இல்லையேல், இங்கே அந்நிய ஆதிக்கம் இல்லை; அந்நிய ஆதிக்கம் இல்லையேல் அடிமைத்தனம் இல்லை; அடிமைத்தனம் இல்லையேல் காங்கிரசுக் கட்சி இல்லை; காங்கிரசுக் கட்சி இல்லையேல் காந்தியடிகள் இல்லை?"

எஸ். ஆர்.

நம் நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 7 (24—10—67) செவ்வாய்

காமராசரின் சவடால்!

[2]

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தல், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசருக்கு நடுக்கத்தைக் கொடுத்திருக்கிறது! தேர்தல் நாள் நெருங்க நெருங்க, அவருக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த நடுக்கம் மேலும் கூடுதலாகிவிடும்!

இத்தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடப்பதற்கு முன்பாகவே, 'தேர்தல் முடிவு காங்கிரசு வேட்பாளருக்குப் பெருந் தோல்வியாக முடியவிருக்கிறது' என்ற உண்மையை, காங்கிரசுப் பெரியவர் உணர்ந்துகொண்டுவிட்டார்! நவம்பர் எட்டு அல்லது ஒன்பதாம் நாள், தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்ற வாக்காளர்கள், தமக்குத் தரவிருக்கின்ற பரிசை நினைத்து நினைத்து, அவர் கண்கள் இப்பொழுதே கண்ணீர் சிந்தத் தொடங்கிவிட்டன!

இத்தேர்தலில், காங்கிரசு வேட்பாளர் தோற்பது நிச்சயம் தான்; இருந்தாலும், கணிசமான வாக்குகளையாவது வாங்கித் தோற்க வேண்டுமே' என்பதைக் குறியாகக் கொண்டுதான், காங்கிரசுப் பெரியவர், தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இதற்காக, கழகத்தின் மீதும் கழக ஆட்சியின் மீதும், எதையெதையோ குற்றச்சாட்டுக்களாக வீசியவண்ணம் உள்ளார்!

ஆட்சி மொழியாக இந்தி திணிக்கப்படுவதை, கழகம் முழுமூச்சாக எதிர்த்துவருகிறது என்பது நாடறிந்த உண்மை. இந்தித் திணிப்புக்கு எதிராகக் கழகம் மேற்கொள்ளக்கூடிய முயற்சிகள் அனைத்துக்கும் தமிழ் மக்களின் ஒருமித்த ஆதரவு இருந்துவருகிறது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தி மொழித் திணிப்பை எதிர்ப்பதில் தி.மு. கழகம் முன்னணியிலும், தீவிரமாகவும் இருந்துவருகிறது என்பதை வைத்துக்கொண்டு, 'இந்தித் திணிப்பை எதிர்த்து நிற்கின்ற ஒன்றினால் மட்டுமே தி.மு. கழகம், தமிழக ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய அளவுக்கு வளர்ந்தோங்கி இருக்கிறது' என்ற முடிவுக்கு, காங்கிரசுப் பெரியவர் வந்துவிட்டிருக்கின்றார். அம்முடிவு, 'தவறானது' என்பதை, அவரால் உணர்ந்துகொள்ள முடியாது. அம்முடிவு, 'தவறானது' என, அவரை உணர்ந்துகொள்ளச் செய்ய நமக்கு ஆற்றலும் இல்லை.

இந்தி எதிர்ப்பின் காரணமாக, நமது முன்னேற்றக் கழகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை; ஆனால், 'இந்தி எதிர்ப்பினால் மட்டுந்தான் இன்று பெற்றுள்ள வளர்ச்சியைத் தி.மு. கழகம் பெற்றிருக்கிறது' என்ற கருத்து, ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. கழக வளர்ச்சிக்கு வேறு பல நியாயமான காரணங்களும் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

'இந்தி எதிர்ப்பினால் மட்டுந்தான் இன்று பெற்றுள்ள வளர்ச்சியைக் கழகம் பெற்றிருக்கிறது' எனத் தாம் கொண்டுவிட்ட தவறான முடிவை அடிப்படையாக வைத்துக்கொண்டு காங்கிரசுப் பெரியவர், 'இந்தித் திணிப்பு என்ற பேச்சுக்கே இடம் கிடையாது; தமிழ் மக்கள்மீது இந்தியைத் திணிக்க அனுமதிக்கமாட்டேன்' என்றெல்லாம்—தாம் பேசுகின்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலெல்லாம்—திரும்பத் திரும்பக் கூறிவருகின்றார். இப்படித் தாம் கூறிவருவதை, 'தமிழ் மக்கள் நம்பமாட்டார்களே' என்ற சந்தேகமும் காங்கிரசுப் பெரியவருக்கு இருக்கிறது.

இதனால், அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் 'இந்தி பேசாத பகுதி மக்களுக்கு நேரு கொடுத்த வாக்குறுதியின்படி, ஆங்கிலமும் ஆட்சி மொழியாக இருந்துவரும் என்பதற்கான மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படும்' என, பன்னிப் பன்னிக் கூறிவருகிறார் காமராசர்!

'இப்படி ஒரு மசோதா சட்டமாக்கப்படாவிட்டால், காங்கிரசு வேட்பாளர் தமது நாடாளுமன்றப் பதவியை விட்டு விலகிவிடுவார்' என்றும்கூட, காமராசர் வாய்ச்சவடால் அடித்துவருகின்றார்.

தென் சென்னையில் போட்டியிடுகின்ற வேட்பாளர், பதவியை விட்டு விலக வேண்டுமானால், அவர் இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும்; அதற்குப் பின்னர்தான், உறுப்பினர் பதவியை விட்டு அவர் விலகுவது என்ற பிரச்சினையே கிளம்புகிறது. எனவே, 'அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில், குறிப்பிட்ட மசோதா சட்டமாக ஆக்கப்படாமல் போகும்பட்சத்தில், ஏற்கனவே தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், தாங்கள் பெற்றுள்ள உறுப்பினர் பதவியை விட்டு விலகிவிடுவர்' என, காமராசர் அறிவிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அப்படி அறிவித்தால்தான், 'காங்கிரசுப் பெரியவரின் கூற்றில் ஏதோ கொஞ்சம் உண்மை இருக்கிறது' எனத் தமிழக மக்களும் தீர்மானிப்பர். இதற்குக் காமராசர் தயார்தானா?

அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில், குறிப்பிட்ட மசோதா கொண்டுவரப்படுமா கொண்டுவரப்படமாட்டாதா என ஆராய்வதற்குமுன், மூன்றாவது நாடாளுமன்றக் கூட்டத்திலும், இப்பொழுதுள்ள நான்காவது நாடாளுமன்றக் கூட்டத்திலும், குறிப்பிட்ட மசோதா ஏன் கொண்டுவரப்படவில்லை? அதற்கு எது காரணம்? இது பற்றிய விளக்கத்தை, காமராசர் ஒளிவுமறைவுக்கு இடமில்லாமல் முதற்கண் அறிவித்தல் வேண்டும்.

'அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் அம்மசோதா கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்படும்' என, அழுத்தந்திருத்தமாகக் காமராசர் அறிவித்திருக்கின்றார். ஆனால், 'இந்து' இதழின் புதுடில்லிச் செய்தியாளர், மொழி மசோதா பற்றி அவ்விதழுக்குத் தந்துள்ள செய்தி, காமராசரின் அறிவிப்பை உறுதி செய்வதாக இருந்திடவில்லை.

"கிடைத்திருக்கின்ற தகவல்களின்படி, அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் மொழி மசோதா கொண்டுவரப் படாமலிருக்கலாம்"

என்ற கருத்தை அந்தப் புதுடில்லிச் செய்தியாளர் தந்திருக்கின்றார்.

இ[illegible]தலைமை அமைச்சர் [illegible]ிரா காந்தியைத் தமிழகத்[illegible]வர் சந்தித்து. 'மொ[illegible]த்தில் சட்ட[illegible]வண்டும்' எ[illegible]ாண்டிருக்கின் [illegible] அதற்[illegible]த தலைமை அமைச்ச[illegible]ன்றக் கூ[illegible]சாதா கொண்டுவரப்படலாம் எனத் தாம் எதிர்பார்ப்[illegible]கட்டுத்[illegible]ளிததிருக்கின்றார்.

தலைமை அமைச்சர் பதிலில் '[illegible]ப[illegible]லை; 'கொண்டுவரப்படலாம்' என்றுதான் அவர் 'எதிர்பா[illegible]'!

மொழி மசோதா பற்றிய உண்மை[illegible] இ[illegible]று இருந்திட, தென் சென்னைத் தேர்தலில் வாக்காளர்களை ஏ[illegible], 'அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் மொழி மசோதா [illegible]ட்டமாக்கப்படும்' என வாய்ச்சவடால் அடித்துவருகின்றார்—அ[illegible]த்திந்தியக் காங்கிரசுத் தலைவர்.

'தம்முடைய பேச்சை, தமிழக மக்க[illegible] நம்புகின்ற காலம் மலையேறிவிட்டது' என்ற அரசியல் உண்மை[illegible]ய, என்றுதான் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் உணர்ந்துகொள்ளப்போகின்றாரோ?

—[illegible]

உண்மைக்கதை

ஐந்து ஏக்கர் நிலத்தில் ஆண்டு ஒன்றுக்கு வருவாய் ரூ. 750!

இந்திராவின் சொந்த நிலத்தில் 'எடுத்துக்காட்டான' விவசாயம்

'ஜெய் கிசான்' — 'அதிக உணவு விளைச்சல்'—என்பன போன்ற முழக்கங்களுக்கு மத்தியில் வந்துள்ள உண்மைச் செய்தி இது!

இந்தியாவில் உள்ள எந்தச் செய்தியாளருக்கும் கிட்டாத இந்த இந்தியத் தகவல், அமெரிக்காவிலிருந்து இங்கு வந்து தங்கியுள்ள 'நியூயார்க் டைம்ஸ்' இதழின் புதுடில்லி நிருபருக்குக் கிடைத்திருக்கிறது.

இது எப்படி ஆச்சரியமோ, அதைப்போலவே இந்தச் செய்தியும் ஆச்சரியமானதுதான்!

ஏழு ஆண்டுகளுக்குமுன் ஓர் ஐந்து ஏக்கர் நிலம் இந்திரா காந்திக்குக் கிடைத்தது; அது, அவருடைய கணவரின் பூர்வீகச் சொத்து!

புதுடில்லியிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள இந்த நிலத்துக்குக் கடந்த $3\frac{1}{2}$ ஆண்டுகளில் இந்திரா போயிருப்பது, ஒரே ஒரு தடவைதான்!

இந்த நிலத்தைப் பயிடும் பத்ரி பிரசாத் என்பவர், எத்தனையோ யோசனைகளை எடுத்துச் சொல்லிய பிறகும், உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை!

இதனால், இதன் ஆண்டு வருவாய், ரூ. 750-ஆக மட்டுமே இருந்திருக்கிறது!

நிலத்தைக் கண்காணிப்பதற்காக, பத்ரி பிரசாத், ஆண்டு ஒன்றுக்குப் பெறும் சம்பளம் மட்டும் ரூ. 960!

மத்திய அமைச்சரவையின் விவசாயத் துறையின் கணக்கு ஒன்றின்படி, ஐந்து ஏக்கர் நிலத்தில் ஆண்டொன்றுக்கு ரூ. 10,000 மதிப்புள்ள தானியங்கள் விளைவிக்கப்படல் வேண்டும்.

★

4 மைல் வேகத்தில் காரை ஓட்டியவருக்கு தண்டனை

1895-ம் ஆண்டு நடந்த உண்மைச் சம்பவம் இது!

ஒரு மணிக்கு நான்கு மைல் 'வேக'த்தில் காரை ஓட்டியதற்காக ஒருவர் தண்டனைக்குள்ளானார்!

பெற்ற தண்டனைக்காகப் பெருமைப்பட்ட அந்தக் காரோட்டியின் பெயர், ஹென்றி முல்லர்.

மோட்டார் வாகன வளர்ச்சியில் ஒரு முக்கிய முன்னோடியான ஹென்றி முல்லர், அண்மையில் தனது 97-வது வயதில் இங்கிலாந்தில் மறைந்தார்!

கார் தொழிலில் பிரபல முன்னோடிகளான ரோல்ஸ்-ராய்ஸ் ஆகியோரின் நெருங்கிய நண்பர் முல்லர்!

ஊராட்சி ஒன்றியங்களை ஒழிக்கும் எண்ணமில்லை!

குறைபாடுகளை நீக்கிப் பயனுள்ள அமைப்புகளாக்குவதே நோக்கம்!

அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னையில் நடைபெற்ற தமிழக ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாநாட்டில், உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :—

"தமிழக அரசு என்ற அழகிய தேர், நலமுடன் ஊர்ந்துவர அச்சாணியாக இருப்பது கிராமக் குடியாட்சி!

பண்டை நாள்தொட்டு இற்றை நாள்வரை தமிழகத்தில் குடியாட்சியானது, 'ஆள்வினையும் ஆன்ற அறிவும்' என இரண்டின் நீள்வினையால் நிலைத்த புகழைப் பெற்றுவந்துள்ளது!

பொதுமறையின் வழிநின்று அறம் பிறழாது குடிதழீஇக் கோலோச்சிய மூவேந்தர் காலந் தொட்டே கிராமக் குடியாட்சி முறை கண்ட இனம், நம்மினம்!

குடவோலை முறைப்படி, ஆன்ற விந்தடங்கிய கொள்கைச் சான்றோர்கள், கிராமத் தன்னாட்சி நடத்தி முன்னேற்றம் கண்ட நம் முன் வரலாறு, மேலை[illegible]டாரும் கண்டு வியக்கும்[illegible]ரு கும.

இடையில் ஏற்பட்ட அ[illegible]ல்— பொருளாதார—ச[illegible]ற்றங்களால், ஊ[illegible] புகழ் மங்கத் தலைப்[illegible]

'விடுதலை பெற்[illegible] நாடு வீறுகொண்டு முன்னேறக் கிராம வளர்ச்சியே அடிப்படை' என்ற கருத்து, அண்ணல் காந்தியடிகள் நமக்குத் தந்து சென்ற அறவுரைகளில் தலையாயதும், தனித்தன்மை வாய்ந்ததும் ஆகும்!

இன்று நம்மிடையே வாழ்ந்துவரும் வள்ளுவராய்—காந்திய நெறியின் உண்மைக் காவலராய் விளங்கிவரும் பேரறிஞர் அண்ணா அவர்களால், கிராமக் குடியாட்சியானது இழந்த பழம் புகழை எய்தித் தமிழக வரலாற்றில் பொற்காலத்தைத்தோற்றுவிக்கும் என்பது என் துணிபு.

நாம் செய்ய வேண்டிய வேலைகள் பெருகிக்கொண்டே செல்கின்றன; ஆனால், அவற்றை நிறைவேற்றத் தேவைப்படும் நிதிப் பெருக்கமோ, 'எதிர் விகிதத்தில் செல்லுகிறது' என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியவனாக உள்ளேன்.

இதுவரை கிடைத்துவந்த மத்திய உதவி நாளுக்கு நாள் குறைந்துவருவதும், நான்காம் திட்டத்தில் நிதி குறைக்கப்பட்டிருப்பதும் நீங்கள் அறியாதவை அல்ல!

மாநில அரசையும், மத்திய அரசையும் முழுமையாக நம்பிக் கொண்டிராமல், தங்கட்குத் தேவையான நிதியைப் பெருக்க ஊராட்சி அமைப்புக்கள் கருத்தூன்றி முயலவேண்டும்.

வருமானத்தைப் பெருக்கும் நிறுவனங்களை ஊராட்சிகள் அமைத்து, நிதிப் பற்றுக் குறையை நீக்க வழிகாண வேண்டும்.

தமது உபரி நிதியை உற்பத்திப் பெருக்கத் திட்டங்களில் செலவிட முன்வர வேண்டும்.

சிக்கனமான — ஆனால், பயன் தரத்தக்க வேலைகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

சென்னை ஊராட்சிச் சட்டம் 1959-ல் நிறைவேற்றப்பட்டது. சில ஆண்டுகளாக இதனை நடைமுறையில் செயல்படுத்திவரும் நாம், இதில் பல திருத்தங்கள் வேண்டுமென்பதை உணருகிறோம்.

'ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்படும்—நீக்கப்படும்; அதனால் பலர் வேலை இழக்க நேரிடும்' என்ற ஐயங்கள் எழத் தேவையேயில்லை!

'நல்லதோர் வீணை செய்தே— அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ' என்ற கவிஞர் பாரதியின் வினாவைத்தான் இக்கூற்றுகட்கு விடையாகத் தர நான் ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஒன்றியம், நல்லதோர் அமைப்பு! அது புழுதியில் எறியப்பட்டதாக இன்றி மீட்டி மகிழும் கலைஞன் கைப்பட்ட நல்ல வீணையாக இசை மிகுந்து விளங்க வேண்டுமென்பதே இன்றைய அரசின் அவா!

இறைக்கும் நீர் வயலிற் சென்று பாயாது வழியில் ஏற்படும் உடைப்புகள் மூலம் வெளிச் சென்று விட்டால், பயிர் விளையாது! வாய்க்காலில் தோன்றும் உடைப்புக்களை அடைக்காதவன் உழவனாக இருக்கமுடியாது!

ஊராட்சிமன்றமாகிய ஏரி—நீர் எங்கும் சேதமாக்காமல்—மக்கள் வாழ்வெனும் வயலிலே, சென்று பாய்தல் வேண்டும். அதற்காக, ஆங்காங்கே தென்படும் அடைப்புகளை நீக்குகின்ற பணியில் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம். இப்பெரும் பணிககு ஒத்துழைப்பு பெரிதும் தேவைப்படுகிறது."

பஞ்ச நிவாரணச் செலவு அதிகரிப்பு

இந்திய அரசு 1966-67-ம் ஆண்டில் பஞ்ச நிவாரணச் செலவிற்காக ரூ. 19 கோடி மட்டும் ஒதுக்கிய போதிலும், திருந்திய மதிப்பீடுகளின்படி அது ரூ. 82 கோடியாக-அதாவது ரூ. 63கோடி அதிகமாக இருக்கும் என்று அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு அச்செலவு பெரிதும் அதிகரித்ததற்குப் பொறுப்பான மாநிலங்கள் வருமாறு :—

மத்தியப் பிரதேசம் (ரூ. 16 கோடி); பீகார் ரூ. 10 கோடி); மேற்கு வங்கம் (ரூ. 8 கோடி); இராஜஸ்தான் (ரூ. 7 கோடி); ஒரிசா (ரூ. 6 கோடி); உத்தரப் பிரதேசம் (ரூ. 5 கோடி); குசராத் (ரூ. 4 கோடி).

மாநிலங்கள் பஞ்ச நிவாரணத்திற்காக 1967—68-ம் ஆண்டிற்கு ஒதுக்கிய மொத்தத் தொகை 55 கோடியே 30 இலட்சம் ரூபாயாகும்.

எல்லா துறையிலும் அரசியல்வாதிகள் ஆதிக்கம்

நாட்டு முன்னேற்றத்திற்குப் பெரிய தடங்கல்!

கட்சிகளுக்கிடையே பகைமை வளராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடை

அறிஞர் அண்ணா ஆய்வுரை

சென்னை, அக். 20—

'அரசியல்வாதிகள் ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்ததைவிட, வாக்காளர்களுக்கு அதிகப் புத்திசாலித்தனம் உண்டு என்பதை, சென்ற பொதுத் தேர்தல் எடுத்துக்காட்டிவிட்டிருக்கிறது! சில மாநிலங்களில் அடியோடு நம்பிக்கை இழந்து போய்விட்டிருந்த பல கட்சிகளை, வாக்காளர்கள், அதிகாரபீடத்தில் ஏற்றி விட்டிருக்கிறார்கள்! 'வீழ்ச்சி என்பது தங்களுக்கு ஒரு போதுமிராது' என்று நம்பிவந்த கட்சிகளை வீழ்த்தி விட்டிருக்கிறார்கள்!

"பிற நாடுகளில் விஞ்ஞானிகள், எஞ்சினீயர்கள், ஆசிரியர்கள், டாக்டர்கள், விவசா[illegible]கள் முதலியோரிடம் அதிக மதிப்புக் காட்டப்படு[illegible]து; ஆனால் இந்தியாவிலோ, எல்லா இடங்களையும் [illegible]ரசியல்வாதிகள்தான் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் [illegible] இந்தியாவின் நிலையான முன்னேற்றத்துக்கு இதும் [illegible] தடங்கல் ஆகும்!"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், சென்னை இ[illegible]ஜி மண்ட[illegible]த்தில் நடைபெற்ற ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கருததறிவித்தார்கள். இத்தொடர்பில் மேலும் அவர், நாட்டின் பல பிரச்சினைகள் பற்றிச் சுட்டிக்காட்டுகையில் குறிப்பிட்டதாவது:—

"தேர்தல் போட்டியில் நட்புறவைக் குலைத்து, பகைமையை வளர்க்கும்வகையில் கட்சி முறை செயலபடுமாகில், 'இந்தியாவுக்கு இது அவசியந்தானா?' என்று யோசிக்க வேண்டும்.

"பெரிய கோளாறுகள் ஏதுமின்றி நான்கு பொதுத் தேர்தல்களை நடத்தி இருப்பதன் மூலம், 50 கோடி மக்களைக் கொண்ட இந்தியா, சனநாயகத்தைச் செயலாக்கிக் காட்டுவதில் தனக்குள்ள திறனை வெளிப்படுத்திக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

"கிராமப் பஞ்சாயத்து அளவிலிருந்து பாடுபட்டால்தான் நமது கனவு நனவாக முடியும்.

"கிராமங்களிலிருந்து 20 முதல் 40 வயதுவரை உள்ளவர்கள், தொழிற்சாலைகளில் வேலைதேடி நகரங்களுக்கு வந்துவிடும் போக்கே, இந்தியாவில் வேளாண்மை குன்றியிருப்பதற்கு முக்கியக் காரணமாகும்.

"மக்களைக் கிராமப்புறங்களுக்குக் கவர்ந்திழுப்பதே ஊராட்சி மன்றங்களின் முதற் பணியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகள், மருத்துவமனை, பொழுதுபோக்கு மன்றங்கள் முதலிய வசதிகளைச் செய்து தருவதன் மூலம் இதைச் சாதிக்கலாம்.

"உணவு உற்பத்திப் பெருக்கம்—குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆகிய இரட்டைப் பணியில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஈடுபட வேண்டும்.

"குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மனப்பூர்வமாக நிறைவேற்றி வைக்காவிட்டால், சென்னையும் கேரளமும் மிகுந்த தொல்லைக்கு ஆளாகக்கூடும். இவ்விரு மாநிலங்களிலும் மக்கட் தோகை அதிகம்.

"ஆண்டுதோறும் அயல்நாடுகளிலிருந்து உணவுத் தானியங்களை இறக்குமதி செய்துகொண்டே போக முடியாது; பிறநாடுகளுக்கு உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்யும் நிலைமையை விரைவில் எட்ட வேண்டும்" என்று நேரு கண்ட கனவை நிறைவேற்றி ஆகவேண்டும்."

மாநாட்டில் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி கொடியேற்றிவைத்து உரையாற்றினார்.

வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி, எதிர்க் கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமன், ஊராட்சிகள் சங்கத் தலைவர் திரு. கே. இராசாராம் ஆகியோரும் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அடித்தளம் அது!

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

மக்களாட்சி முறைக்கு அடித்தளமாக உள்ளது உள்ளாட்சி அமைப்புகள் என்பதையும், அந்த அடித்தளத்துக்கு வலுவேற்றினாலன்றி, மக்களாட்சி செம்மையாக நடைபெறாதென்பதையும் நான் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன்.

உங்கள் பணி எந்த எந்த அளவுக்குச் செம்மையாகவும் பாங்குடனும் நடைபெறுகிறதோ, அந்த அளவுக்கு [illegible]சியின் பணியும் [illegible]

உணவுக்[illegible] வெளிந[illegible] கையேந் து[illegible] தென்[illegible] இழிவை [illegible]ட்டுவ[illegible] பதை எல்[illegible] திருக்கின்றனர்.

கனவல்ல--ந[illegible]

இன்னும் சில[illegible]களில் இந்த நாடு உ[illegible]ில் தன் தேவையையும் நி[illegible]வுசெய்து தன்னிறைவு பெ[illegible] என்பதோடு, வெளிநா[illegible]களுக்கும் உணவை ஏற்றும[illegible] செய்யும் ஆற்றலை உடைய[illegible] ஆகும் என்றால், அது வெ[illegible]றும் கனவல்ல! நடைமுறையில் நனவாகக் கூடியதொரு நம்பிக்கையே!

100-க்கு 80 பேர் விவசாயிகளாக உள்ள இந்நாட்டில் உணவுத் துறையில் இதுவரையில் தன்னிறைவு பெறாமலே இருப்பது வருந்தத்தக்கது.

அந்தநிலை இன்றுஇல்லை!

குடும்பச் செல்வத்தையே—குழந்தைப் பேற்றினையே பெரும் செல்வமெனக் கருதும் மக்கள்—நம் மக்கள், 'ஒருவனுக்கு எத்தனை ஏக்கர் நிலம் சொந்தம்' என்பதைக் கேட்பதைக் காட்டிலும், 'எத்தனைக் குழந்தைகள்' என்பதைக் கேட்டறிந்து மகிழ்சின்றனர்!

இதை நான் குறை சொல்லவில்லை; மக்கட் தொகை நெருக்கத்தையே உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

நாட்டின் நிலப்பரப்பு — வளம்— தொழில் திறம் அதிகமாக உள்ள சில நாடுகள், இன்னும் பல கோடி மக்களைத் தாங்கிக் கொள்ளும் நிலையில் உள்ளன; நம் நிலை அப்படியில்லை! தமிழ்நாட்டிலும், கேரளத்திலும் மக்கட் தொகை அழுத்தம் மிக அதிகம்!

இந்திய வரைபடத்தைப் பார்த்தால், மேலே பரந்து விரிந்துள்ள நிலப்பரப்பு, கீழே வரவா குறுகிக் கடலை ஊடுருவிச் செல்வதைக் காணலாம்; இங்கு மக்கள் தொகை அழுத்தம் அதிகம். ஆகையினால்தான், தமிழர்கள் பல தீவுகளுக்கும் சென்று கொண்டிருந்தார்கள்! அங்கிலை, இன்று இல்லை!

மலேசியாவில் தமிழர், விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக இருக்கலாம்; இதர நாடுகளில் அத்தகைய நிலை இல்லை!

இலங்கை சென்றவர்களில் இலட்சக்கணக்கானவர்கள் திரும்பிவர இருப்பதும், ஏற்கனவே பர்மாவிலிருந்து பல இலட்சக்கணக்கானவர் திரும்பி விட்டார்களென்பதும் நீங்கள் அறிந்ததே!

ஆகையினாலே, மக்கட்தொகைப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டியதும், உணவு உற்பத்தியை அதிகரிப்பதும் மிக முக்கிய கடமைகள் என்பதில் எள்ளவும் ஐயப்பாடு இல்லை.

கிராமங்கள் ஒளிபெற!

'கிராம ராஜ்யம்' என்பது காந்தியடிகளால் கூறப்பட்ட தத்துவமே என்றாலும், பழங்காலம் முதல் 'கிராம ராஜ்ய' முறை இருந்து வந்துள்ளது என்பதை சோழர் காலத்துக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் நன்கு புலப்படுத்துகின்றன!

ஆங்கில அரசு அமைக்கப்பட்டதால், ஓரளவு கிராம ராஜ்ய அமைப்பு மங்கிற்று! இது புத்துயிர் பெற காந்தியடிகள், 'கிராம ராஜ்யமே சுயராஜ்யம்' என்று குரலெழுப்பினர்!

கிராமங்களெல்லாம் ஒளியற்றனவாய்—வேலையற்றனவாய்—வசதிகளற்றனவாய்—இருக்கும் நிலை மாற வேண்டும்!

கிராமங்கள் ஒளிவீசக் கூடியவையாய்—மருத்துவமனைகளுடையனவாய்—பொழுதுபோக்கு இடங்களைப் பெற்றனவாய்—படிப்பகங்கள் நிறைந்ததாய்ச் சீர்திருந்த வேண்டும்!

செயல்படுவது எப்படி?

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 'இவர்கள் ஒரு கட்சி—நாம் ஒரு கட்சியாயிற்றே—எப்படித் தோழமை உணர்வோடு இருக்க முடியும்' என்று ஐயப்பாடு கொண்டிருந்தனர்.

'கட்சிப் பாகுபாடு காரணமாக நட்புக் கெடுகிறதென்றால்—தோழமைக்குக் குந்தகம் வருகிறதென்றால் — கட்சி அரசியலே வேண்டாம்' என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் சொல்வதுபோல், கட்சி அரசியலே வேண்டாமென்பேன்; ஆனால், சனநாயகத்தில் கட்சிகள் தேவைப்படுகின்றன. அப்படி உள்ள கட்சிகளும், ஏற்றம் இறைப்பது போல ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டும். ஏற்றக்கோலுக்குள் நின்று செயல்பட வேண்டும். ஏற்றக்கோலுக்கு அப்பாற் போனால், கிணற்றில் விழ வேண்டிவரும்; பயிருக்குத் தேவையான நீரும் கிடைக்காது.

அந்த வகையில் அரசியல் கட்சிகளும், சனநாயகக் கோட்டுக்குள் இருந்து செயல்பட வேண்டும்.

ஏற்றப் பாட்டிலும், 'பாட்டுக்கு எதிர் பாட்டு', என்று உண்டு; இரண்டுமே இனிமையானதாக இருக்கும்; அதுபோலத்தான், சனநாயக அரசியலும் இருக்க வேண்டும்.

கிராமப்புறங்களில், அரசியலால் மனக்கிலேசம் வளராதிருக்க வேண்டும்.

நினைத்தாலே புல்லரிக்கத்தக்கதான பெருந்தன்மையுடன் பிரிட்டனை ஆண்ட சர்ச்சில், எதிர்க்கட்சித் தலைவர் அட்லியை நடத்தியிருக்கிறார்; அத்தகைய

(4-ம் பக்கம் பார்க்க)

தோழர்களே! பயன்படுத்தத் தவறாதீர்கள்!
●ஊ ஊயிடுவோரின் வாயடைக்க
●காளையப்பர்களின் கதை விரிக்க
●கழக ஆட்சியின் பெருமை கூற
●கருத்துக் குலுங்கும் கலைவிருந்து
தென்னகப் பல்கலைக் குழுவினர் தரும்
தினகரன் எழுதிய
ஆளுகின்றார் அண்ணா
குமாரி விஜயாவின் கலைநிகழ்ச்சி
விவரங்களுக்கு
மு.வரதராஜன், திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை சென்னை.5

'சனநாயகம் தழைத்தோங்க உரம்மிக்க வல்லவர்கள் --- வழிநடத்தும் ஆற்றல் உள்ளவர்கள் நாட்டிற்குத் தேவை'

'அழிவுப் பாதையில் செல்லாதிருக்க இந்நிலை உருவாவது மிக அவசியம்'

முதலமைச்சர் அண்ணா ஆய்வுரை

"பிரச்சினைகளைப் பற்றிப் பேச எழுகின்ற நாமே பிரச்சினைகளாக மாறிவிடுகிறோம்! அந்த அளவுக்கு நாம் குன்றிவிட்டோம்!

'இந்தத் துணைக்கண்டம், அதன் சனநாயக வாழ்வின் இருபதாம் வயதினைக் கடந்துகொண்டிருக்கிறது! இராஜாஜி, சர். இராமசாமி போன்[illegible] பெரியவர்கள், இந்த சனநாயக வாழ்வை [illegible]வந்தால்தான், சனநாயகம் தழைத்தோங் [illegible] அழிவுப் பாதையை நோக்கி அழைத்துச் செ[illegible]!

"சனநாயகம் என்பதால், சாதாரணத் திறமையுடையவர்கள் அரசியலை வழிநடத்திச் சென்றால் போதுமென்று எண்ணுவதோ, சொல்லுவதோ கூடாது! உரம்மிக்க வல்லவர்கள் தேவை! வழிநடத்தும் ஆற்றல் உள்ளவர்கள் தேவை!"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள். இரட்டையர் சர். ஏ. இராமசாமி—ஏ. இலட்சுமணசாமி ஆகியோருக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் உரையாற்றுகையில் வலியுறுத்தினார்.

சென்னைப் பல்கலைக்கழக பேரவை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, கவர்னர் உஜ்ஜல் சிங் தலைமை தாங்கினார்.

இரட்டையருக்கு 81-வது வயது தொடங்கியதையொட்டி வெளியிடப்பட்ட நினைவு மலரை அவர்களிடம் வழங்கி வாழ்த்திப் பேசுகையில், முதலமைச்சர் கூறியதாவது:—

"ஆற்காடு சகோதரர்கள் என்று அழைக்கப்படும் இவ்விரட்டையர், தமிழகம் தந்த உரம் மிகுந்த வல்லவர்கள்! இந்தியாவின் மேதைகள்! உலகறிந்த சான்றோர்! இந்த நூற்றாண்டின் உலக மேதைகளுள் சிலராக மதிக்கப்படுபவர்கள்!

இவ்விரட்டையர், தங்கள் அலுவல்கள் அனைத்திலும் கடைபிடித்த பண்பாடும் நாகரிகமும், தனிச் சிறப்புமிக்கவை!

செறிந்த அனுபவங்களைக் கொண்ட இவ்விரட்டையரது வழிகாட்டுதல், நமக்குத் தேவை; வருங்காலத் தலைமுறையினரின் நன்மை கருதி, தங்களது செறிந்த அனுபவங்களை அவர்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்விரட்டையரது வாழ்வு மகத்தானது — மகோன்னதமானது! சூட்டினை ஏற்படுத்தாதது; ஆனால், ஒளியினை உமிழும்!

இவர்களது சேவை இன்னும் நாட்டுக்குத் தேவை! சந்தைச் சதுக்கத்தில் வந்து நின்றுதான், மக்களை இவர்கள் வழிநடத்த வேண்டுமென்பதில்லை; தாங்கள் இருக்குமிடத்துப் பலகணியில் நின்றபடியே இவர்களால் மக்களுக்கு வழிகாட்டிட முடியும்! இவர்கள் நிறைவாழ்வு வாழ்வார்களாக!"

தென் சென்னை தேர்தல்

அலுவலகங்கள் திறப்பு

★

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் 1/520 எண்ணுள்ள கட்டிடத்தில் இயங்கவிருக்கும் தேர்தல் அலுவலகத்தை, 25-10-67 இரவு 8-30 மணிக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைப்பார்.

71-வது வட்ட தி.மு.க. சார்பில் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில், 49-ம் எண்ணுள்ள இல்லத்தில், 25—10—67 இரவு 8 மணிக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைப்பார்.

காதால் கேட்டது!

கூட்டத்தில் ஒருவர் :— யாரப்பா, இப்படி ஒரேயடியாக அளப்பது?

பேச்சைக் கேட்கும் மற்றொருவர் :— தெரியாதா உனக்கு? அவர் தான் அளகேசன்!

செஸ்டர் போல்சுடன் அண்ணு

உதகை கருத்தரங்கில் பங்கேற்பர்

சென்னை, அக். 23— உதகமண்டலத்தில் உள்ள 'தமிழக' மாளிகையில், 26-ம் நாள் காலை 9 மணிக்கு மூன்று நாள் கருத்தரங்கு ஒன்றை அமெரிக்கத் தூதர் செஸ்டர் போல்ஸ் துவக்கிவைப்பார்.

அமெரிக்காவில் பயிற்சி பெற்ற தமிழ்நாட்டு அதிகாரிகள், ஆசிரியர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு இது.

தமிழக அரசாங்கமும்—யு.எஸ்.ஏ.ஐ.டி. என்னும் அமெரிக்க அரசாங்க வளர்ச்சிப் பணி உதவி நிலையமும் கூட்டாக இந்த அரங்கை நடத்துகின்றன.

முதல் நாள் கூட்டத்துக்குத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமைதாங்குவார்கள்; தென்னிந்தியாவிலுள்ள அமெரிக்க கான்சல்-ஜெனரல் டாக்டர் ஆல்பர்ட் பி. பிராங்க்ளின் கலந்துகொள்வார்.

கடந்த சில ஆண்டுகளில் யு.எஸ்.ஏ.ஐ.டி. திட்டங்களின்கீழ் அமெரிக்காவில் உயர் பயிற்சி பெற்ற தமிழ்நாட்டவர் ஏறத்தாழ 75 பேர், கருத்தரங்கில் பங்கு பெறுவர்.

அரங்கில் பங்கு கொள்வோர் ஐந்து தனித் துறைகளைச் சேர்ந்தவர்கள்; வேளாண்மை—கல்வி—குடும்பக் கட்டுப்பாடும், பொதுச் சுகாதாரமும், தொழிலும் விசையும், தொழிலாளர் நலனும் நிர்வாகமும் ஆகியவை மேற்சொன்ன ஐந்து துறைகள். அவர்கள், தமது அனுபவத்தையும் அறிவையும் இன்னும் சிறந்த முறையில் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்று ஆலோசிப்பார்கள்.

யு.எஸ்.ஏ.ஐ.டி. அதிகாரிகளும் ஆலோசகர்களுமாக சுமார் 25 பேர் அரங்கில் பங்குகொள்வர். இவர்கள், மேலே சொன்ன துறைகளைச் சேர்ந்த குழுக் கூட்டங்களில் பங்குகொள்வோரோடு சேர்ந்து பணிபுரிவர்.

இரண்டாவது நாளன்று இந்தக் குழுக்கள் தம் ஆராய்ச்சியை ஒட்டி—பைக்காரா அணை, குந்தா மின்விசை நிலையம், இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், பேஸ்ச்சூர் இன்ஸ்டிடியூட், தாவரவியல் தோட்டம், முதுமலைக் காடுகள் ஆகிய இடங்களுக்குச் சென்று திரும்பும்.

இறுதி நாள் கூட்டத்துக்கு (அக். 28) தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமைதாங்குவார்.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிலையை நோக்கி நாம் வளர வேண்டும்.

ஓரளவு பற்றற்றதாய் அரசியல் இருந்தாலே அது சாத்தியப் படும்.

கட்சிக் காழ்ப்பை விட்டுவிடுவது, தான் சார்ந்த கட்சியைக் கெடுத்து விடுவதாகாதா என்று சிலர் கேட்கக் கூடும்.

உண்மையான கட்சி வளர்ச்சி, மற்றவர்களை மதிப்பதில்தான் ஏற்படும்!''

எம். ஆர். இராதா மீதான வழக்கு

நவ. 4-ல் தீர்ப்பு

சென்னை, அக். 23— புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களைச் சுட்டுத் தானும் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக நடிகர் எம்.ஆர். இராதா மீது தொடரப்பட்ட வழக்கில், நவம்பர் 4-ஆம் நாள் தீர்ப்பு அளிக்கப்படும் என்று நீதிபதி அறிவித்தார்.

"அதற்குள் தீர்ப்பை நான் எழுதி முடித்துவிட்டால், இரு தரப்பினருக்கும் முன்னதாகத் தெரிவிக்கிறேன்; இல்லாவிட்டால் நவ. 4-ஆம் நாள் தீர்ப்பு வழங்கப்படும்'' என்றுர்.

ஜூலை முதல் நாள் தொடங்கி 52 நாட்கள் விசாரணை நடத்தப்பெற்ற இந்த வழக்கு, இன்று மாலையுடன் முடிவுற்றது.

நடிகர்இராதா தரப்பில் வழக்கறிஞர் மோகன் குமாரமங்கலம் எழுப்பிய சில வினுக்களுக்கு, அரசு வழக்குரைஞர் திரு. பி. ஆர். கோகுலகிருட்டினன் பதிலளித்ததுடன் இன்று விசாரணை முடிவடைந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை [illegible]) [illegible]

கண்களிலும் கரங்களிலும் சிகிச்சை பெறுவோருக்கு நகர பஸ்களில் இலவச அனுமதி

அமைச்சர் மு. கருணாநிதி அறிவிப்பு

சென்னை, அக். 24— கண்களில் சிகிச்சை பெற்றும் கால்களில் சிகிச்சை பெற்றும் சென்னையில் அரசினர் மருத்துவ மனைகளுக்குச் சென்றுவரும் பிணியாளர்கள், சிகிச்சை பெறும் காலம் முடியும்வரையில் அந்தந்த மருத்துவமனைப் பொறுப்பாளரின் சான்றிதழ் பெற்றுக்கொண்டால், சென்னை நகர பஸ்களில் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள்.

மருத்துவமனைக்குச் சென்று திரும்ப ஒரு துணை தேவைப்படுவோருக்கு மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்படவிருக்கிறது.

துணைக்குச் செல்லுகிறவர்களுக்குப் பஸ் கட்டணம் உண்டு; குறிப்பிடப்பட்ட பிணியாளர்களுக்கு கட்டணம் இல்லை.

மத்திய மருத்துவமனை-ஸ்டான்லி மருத்துவமனை — இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனை—எழும்பூர் அரசினர் கண் மருத்துவமனை—ஆகிய மருத்துவமனைகளில் பொறுப்பாளர்கள் தரும் அத்தாட்சியின் பேரில் இலவசப் பயண அனுமதி வழங்கப்படும்.

"இந்த வசதி, நவம்பர் மாத இறுதிக்குள் அமுலாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன''

என்று போக்குவரத்து அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் அறிவித்தார்.

பார்க்பேர் பொருட்காட்சி -1967-68

எஸ். ஐ. ஏ. ஏ. திடல் [மூர் மார்க்கெட் பின்புறம்] சென்னை-3.

ஆதரவாளர்கள் உடனே இடத்திற்கு விண்ணப்பிக்கவும்

ஸ்டால்கள் கட்டவும், எலக்ட்ரிக் வேலைகள், ஒலிபெருக்கி அமைப்பு முதலிய உரிமைகளுக்கும் 31—10—67-க்குள் டெண்டர்கள் கோரப்படுகின்றன.

விளம்பரம் செய்தல், சிற்றுண்டிச்சாலை நடத்துதல், சைக்கிள் ஸ்டாண்ட் அமைத்தல், குளிர்ந்த பானம், சோடா கலர், ஐஸ்கிரீம், வெற்றிலைபாக்கு, பீடி, சிகரெட், மற்றும் பல விற்பனை முதலியவைகட்கு ஏகபோக உரிமை 5—11—67 ஞாயிறன்று காலை 10 மணிக்கு மேல் பொருட்காட்சி அலுவலகத்தில் ஏலம் விடப்படும்.

T.C. & B.C. வேலைகளுக்கு முன்பணம் கட்டக்கூடியவர்கள் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

அலுவலகத் தொலைபேசி எண் : 38481

கே. கோவிந்தசாமி, M.C. (ஆர்கனைசர்)

அமைச்சர் கருணாநிதி உடல்நிலை

சென்னை, அக். 23— பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், இன்று சென்னை பெரிய மருத்துவமனை சென்று தனது உடல்நிலையைப் பரிசோதித்துக் கொண்டார்.

விபத்து நடந்ததுமுதல் அவரது மூக்கில் நீர் சுரந்து வருகிறது; அதற்கு மின்சார சிகிச்சை அளிக்கப்பட்டது; தொடர்ந்து இந்த சிகிச்சை அளிக்கப்படும்.

பின்னர், கண் மருத்துவமனையில் கண்ணைப் பரிசோதனை செய்த போது, முன்பு அறுவைச் சிகிச்சை செய்த கண் சிறிது பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இன்னும் சில நாட்கள் அந்தக் கண்ணில் வெளிச்சம் படக் கூடாது என்றும் கூறி, கண்ணிலே கட்டுப்போட்டுள்ளனர்.

'மேலும் முழு ஓய்வு தேவை' என்று மருத்துவர்கள் கூறியுள்ளதால், பார்வையாளர்களும், கழகத் தோழர்களும் அவரைச் சந்திக்காதிருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

சென்னைக்கு காவிரி நீர்

திட்டத்துக்கு மாநகராட்சி ஒப்புதல்

சென்னை, அக். 23— வீராணத்து ஏரி மூலம் காவிரி நீரைச் சென்னை நகருக்குக் கொணரும் ரூ. 24.5 கோடி செலவு மதிப்பீடுள்ள திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சென்னை மாநகராட்சி மன்றம் இன்று ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்துக்கான செலவில் பாதியை கடனுதவியாகவும், மற்றொரு பாதியை மான்யமாகவும் தருமாறு தமிழக அரசை மாநகராட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

தி. மு. கழக இடைத் தேர்தல்கள்—நகராட்சித் தேர்தல் நிதி

கழகத் தேர்தல் நிதியாகத் தலைமைக் கழகத்திற்குக் கிடைத்துள்ள தொகை விவரம் வருமாறு :—

	ரூ. காசு
சென்னைப் பொதுக் குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட தற்கேற்பத் திருச்சி மா[illegible]க் கழகத்தின் சார்பில்—மாவட்டச் செயலாளர் [illegible]. அன்பில் தருமலிங்கம் அவர்கள் கழகப் பொருள[illegible]ரிடம் சேர்ப்பித்த தொகை	8,550.00
சென்னை—காசிமேடு [illegible]ர் இராசு அவர்களின் புதுமனை புகுவிழா நிக[illegible]3–9–67 அன்று பொருளாளர் மு. கருணா[illegible]களிடம் தரப்பட்டது	51.00
சென்னை 47-வ[illegible]ட்டம் அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் திரு.வி.க. தெரு தோழர் நடராசன் அவர்களால் தோழர் மைனர் மோசஸ் அவர்களிடம் அளிக்கப்பட்ட தொகை	51.00
கழக இசை நிகழ்ச்சியாளர் திருவாரூர் முருகு பாண்டியன் நெய்வேலி நிகழ்ச்சியின்போது உண்டியல் மூலம் வசூலித்தது	50.00
அறந்தாங்கி பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் இராசன் என்கிற சிவசுப்பிரமணியம் அளித்தது	500.00
திருச்சி மாவட்டக் கழகச் சார்பில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட தொகை ரூ. 8,550.00 தொடர்ச்சியாக திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பொருளாளரிடம் சேர்ப்பித்த தொகை	450.00
சென்னைப் பொதுக் குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட தற்கேற்ப, வடஆற்காடு மாவட்டக் கழகச் சார்பில் செயலாளர் திரு. இரா. தர்மலிங்கம் அவர்கள் கழகப் பொருளாளரிடம் சேர்ப்பித்த தொகை	3,500.00
ஆக மொத்தம்	13,152.00

—பொருளாளர் தி.மு.க.

தமிழ் மன்றத் துவக்க விழா

தாம்பரம் கௌரிவாக்கம் எஸ். ஐ. வி. இ. டி. கல்லூரித் தமிழ்மன்றத் தொடக்க விழா, 25—10—67 மாலை 3-மணிக்கு நடைபெறும்; திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. துவக்கிவைப்பார்; திரு. க. அறிவழகன் எம். ஏ., எம்.எல்.சி., திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைப்பார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

26--10--67

திருமணி

தி.மு.க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 5 மணிக்கு பாரதிபுரத்தில்; தலைவர் : செ. கோ. விசுவநாதம் எம்.எல்.ஏ.; பேசுவோர் : அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, சி. சிட்டிபாபு எம்.பி., கொ. கோதண்டம் எம்.எல்.ஏ., செ. எ. பலராமன், ஏ. ஆர். அன்சர் எம்.சி., வ. பசுபதி எம்.சி., சி. எம். தட்சிணாமூர்த்தி, சு. தாமோதரன், கோ. ஆலால சுந்தரம்.

சென்னை 46-வது வட்டம்

தி. மு. கழகச் சார்பில் இரவு 7 மணிக்கு; தலைவர் : ச. கணேசன்; பேசுவோர் : க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., அ. பொ. அரசு எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம். எல். ஏ., நாவளவன், ஜீவா கலைமணி பி.ஏ.

கலை நிகழ்ச்சி

புதுக்கோட்டை, கருணாநிதி படிப்பகச் சார்பில் 25—10—67 மாலை 6 மணிக்கு படிப்பகப் பணிமனை அருகில், டி. சுந்தரராசன் தலைமையில் முருகுபாண்டியனின் அண்ணாவின் ஆட்சி என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கள்ள நோட்டுப் புழக்கத்துக்கும் இதுதான் காரணமோ?

"மத்திய சர்க்கார் ரூ. 80 கோடிக்கு நோட்டு அடித்ததாக முதல் மந்திரி சொன்னுரே; நீங்கள் (தமிழக அரசு) ரூ. 20 கோ[illegible]கிறீர்கள்; 'இப்படி ஒவ்வொரு ராஜ்யமும் கேட்டா[illegible] நோட்டு [illegible] செய்வார் கள்[illegible] அத[illegible] பிறகு, அ[illegible] பேச்சே [illegible]தம் இவர்[illegible]ன்ன செ[illegible]யப்போகிறுர் [illegible] என[illegible]தைப் பார்க்கப்போகிறோ[illegible]''

[illegible] கூட்டத்தில் காமராசர்

★ மாநிலங்கள் தேவைக்காகக் [illegible], மத்திய அரசு அதை, நோட்டு அடித்துத்தா[illegible] [illegible]ளிக்க வேண்டும் என்றே, அல்லது அதுதான் ஒரு [illegible]ந்த வழி என்றே, எந்தப் பொருளாதாரப் புத்தகமு[illegible] கூறவில்லை!

★ 'தேவை இருக்கிறது' என்பதற்[illegible] அல்லது குறுக்கு வழியில் செல்வந்தனுக மாற [illegible] வேண்டுமென்பதற்காகத்தான் கள்ள நோட்டு[illegible] பேர்வழிகள்கூட அச்சடிப்பதாகக் கூறுகிறுர்கள்[illegible] அப்படியானுல், அவர்களது வழியை, 'சிறந்தது' என ஏற்கிறுரா காமராசர்?

—'பாக்சர்'